LIBRARY
25 FEB 2002
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## PART – I EXAMINATION IN BUSINESS ADMINISTRATION/COMMERCE – 2000/2001 (REPEAT)
## (October/November'2001)

## BBA/COM 205 Commercial Law

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
(எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.)

---

01. திரு 'A' என்பவர் 01.01.1990 இல் இருந்து மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள உதயம் லிமிட்டற் என்ற கம்பனியில் தொழில்நுட்பவியலாளராக வேலை செய்து வந்தார். 25.10.2000 ஆம் திகதியன்று கம்பனிக்குச் சொந்தமான ரோயோட்டா வாகனத்தை மதுபோதையில் செலுத்தியதன் விளைவாக விபத்து ஏற்பட்டு அவ்விபத்தின் நிமிர்த்தம் ரூ.200,000/- இரண்டு லெட்சம் நஷ்டத்தை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் திரு 'A' 01.11.2000 ஆம் திகதியிலிருந்து சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். திரு 'A' இடைநிறுத்தம் செய்யப்பட்டபோது பெற்ற மாதாந்தச் சம்பளம் ரூ. 12,000/- பன்னிரெண்டாயிரம். இதுவரை இவருக்கெதிரான உள்ளக விசாரணை நடத்தப்படவுமில்லை. இவர் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்படவுமில்லை.

திரு 'A' சட்டத்தரணியான உங்களிடம் அவரது தொழில் பிணக்கு சம்பந்தமாக ஆலோசனைபெற வந்துள்ளார்.

(அ) திரு 'A' இற்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) திரு 'A' இன் சார்பில் தொழில் நியாயமன்றிற்கு உங்களால் ஒரு சட்டப்படியான விண்ணப்பம் கோவ்வையிட முடியுமா? அவ்வாறாயின் தொழில் நியாயமன்றிற்கு 'A' சார்பில் வரையப்படும் மனுவின் மாதிரியை வரைக.

மேற்படி கம்பனியின் பொதுமுகாமையாளரான திரு 'B' மட்டக்களப்பு தொழில் நியாயமன்றால் அனுப்பப்பட்டுள்ள அழைப்புக் கட்டளையுடன் திரு 'A' இன் சட்டத்தரணியால் கோவையிடப்பட்டுள்ள மனுவின் பிரதியுடன் சட்டத்தரணியான உங்களிடம் ஆலோசனை பெற வந்துள்ளார்.

(இ) திரு 'B' இற்கு ஆலோசனை வழங்குக.

(ஈ) கம்பனியின் சார்பில் 'A' இன் சட்டத்தரணியால் கோவையிடப்பட்டுள்ள மனுவிற்கு வரையப்படும் மறுமொழியின் மாதிரியொன்றை வரைக.

02. (அ) கைத்தொழில் பிணக்குகளை தீர்க்கும் முறைகள் பற்றி முழுக்குறிப்பு எழுதுக.

(ஆ) ஒரு கைத்தொழில் நீதிமன்றத்தின் அதிகாரங்களையும், கடமைகளையும் கூறுக.

03. பின்வரும் நிலைமைகளில் ஒரு ஒப்பந்தம் உருவாகி உள்ளதா என்பதை ஆராய்க?

(அ) திரு 'A' என்பவர் ஒரு கடையில் ரூ. 100/- விலைச் சுட்டியுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் மேற்சட்டையைக் காண்கிறார். அவர் அதனை வாங்குவதற்கு விரும்பி கடைக்காரனிடம் விசாரிக்கிறார். கடைக்காரர் அதன் விலை ரூ.1000/- ஆயிரம் எனவும் தவறுதலாக ரூ.100/- நூறு என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் கூறுகிறான்.

(ஆ) திரு 'A' என்பவர் தனது மோட்டார் சைக்கிளை ரூ. 30,000/- முப்பதாயிரம் ரூபாவிற்கு விற்பதற்கு 'B' என்பவருக்கு கொடைமுனைவு செய்தார். 'B' என்பவர் தான் ரூ.28,000/- இருபத்தெட்டாயிரத்திற்கு வாங்குவதற்கு சம்மதம் தெரிவித்தார். ஆனால் 'A' 30,000/- முப்பதாயிரத்திற்கு குறைவாக விற்பதில்லையென கூறினார். பின்னர் 'B' தொலைபேசி மூலம் தான் ரூ.30,000/- முப்பதாயிரத்திற்கு குறித்த மோட்டார் சைக்கிளை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்தார்.

25 FEB 2002
Eastern University, Sri Lanka

(இ) திருமதி கந்தசாமி நவீன சந்தைக்கு சென்று அங்கு வழங்கப்பட்ட கூடையில் பொருட்களை நிரப்பினார். அது ஒரு சுயசேவை கடையாகும். அதன் பிறகுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது தான் பணம் கொண்டு வரவில்லை என்பது. பின்னர் தான் எடுத்த பொருட்களை அவை இருந்த இடத்தில் வைக்க முயன்றாள் அவ்வேளையில் கடையின் முகாமையாளர் அவளை தடுத்துநிறுத்தி பொருட்கள் வாங்கப்பட்டு விட்டன என்றும், அவள் கட்டாயம் பணம் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

04. சிறு குறிப்பு எழுதுக.

(அ) காப்புறுதிப் பூட்கை
(ஆ) கம்பனிப் பதிவாளர்
(இ) அவசிய முகவராண்மை
(ஈ) உயர்நிலை நீதிமன்றுகள்
(உ) மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டம்
(ஊ) வணிக வங்கி.

05. பின்வருவனவற்றை வேறுபடுத்துக.

(அ) பங்குடமையின் பங்காளரும், கம்பனியின் பங்குதாரரும்.
(ஆ) விற்பனையும், விற்பனை உடன்படிக்கையும்.
(இ) கொடைமுனைவும், எதிர்கொடை முனைவும்.
(ஈ) பொது கம்பனியும், தனிக்கம்பனியும்.

06. தொழில் நட்டவீட்டு ஆணையாளர் பற்றிய விரிவான விபரங்களைத் தருக.

07. பின்வருவனவற்றில் இருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?

(a) வலிதான ஒப்பந்தம்.
(b) ஒப்பந்தம் முடிவுறல்

உமது விடை தீர்க்கப்பட்ட வழக்குகளை மேற்கோள் காட்டி விளக்கப்பட வேண்டும்.

*****************